# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:153 ★03.10.2026 ★தமிழ் நாளிதழ் ★சனிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:153 ★03.10.2026 ★TamilDaily ★Saturday ★Page-4 ★Price-₹5/- Chennai




கன்னியாகுமரி மாவட்டம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசரும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு உயர் நீதிமன்ற திரு.ஜி. இளந்தேரையான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்தார். அவர்களை குமாரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு, பிரதாப் இ,ஆ,ப அவர்கள் நாகர்கோவில் விருந்தின மாளிகையில் வரவோற்று புத்தகத்தை வழங்கினார் .



திண்டுக்கல் மாவட்டம் பழனி வ உ சி பேருந்து நிலையத்தில் உள்ள காந்தி சிலையின் கால்கள் சேதம் அடைந்துள்ளது அதேபோல் அடிவாரம் சரவணப் பொய்கை அருகே உள்ள காமராஜர் சிலையும் பெயிண்டிங் பராமரிப்பு இல்லாமல் சேதமடைந்து உள்ளது இவைகளை பழனி நகராட்சி நிர்வாகம் அல்லது ஸ்பான்சர் நன்கொடையாளர்கள் மூலம் அல்லது வேற நடவடிக்கை மூலமாக விரைவில் சரி செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூக அமைப்பினர் மேலும் விசேஷ மற்றும் விசேஷ காலங்களில் இந்த சிலை முன்னாள் உள்ள கம்பி வேலியை அகற்றி நிகழ்ச்சிகளை முடித்து விட்ட பிறகு வேலையே போடுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும் என பழனி பொதுமக்கள் சார்பாகவும் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்

## காந்தியடிகளின் கொள்கைகளை காக்க உறுதியேற்போம்:

# திருவண்ணாமலையில் காந்தி சிலைக்கு காங்கிரஸ் மாநகர தலைவர் வெற்றி செல்வன் மாலை அணிவித்து மரியாதை



உத்தமர் காந்தியடிகளின் 158வது பிறந்த நாளை முன்னிட்டு திருவண்ணாமலை மாநகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

திருவண்ணாமலை மாநகராட்சியில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாநகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் வெற்றி செல்வன் இன்று (02.10.2026) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து காந்தியடிகளின் திருவுருவச் சிலை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு காந்தியடிகளின் தியாகம், அகிம்சை, சத்தியம், ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கக் கொள்கைகளை நினைவு கூர்ந்தனர். இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகள் ஆற்றிய பங்களிப்பு மற்றும் அவரது அகிம்சை வழியிலான போராட்டங்கள் குறித்து நிர்வாகிகள் நினைவு கூர்ந்தனர். நாட்டில் ஒற்றுமை, சகோதரத்துவம், சமூக நல்லிணக்கம் மற்றும் அமைதி நிலவ காந்தியடிகளின் கொள்கைகளை மக்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், காந்தியடிகள் வலியுறுத்திய சுயசார்பு, கிராமப்புற வளர்ச்சி, கதர் பயன்பாடு, தூய்மை மற்றும் ஏழை, எளிய மக்களின் முன்னேற்றம் போன்ற கருத்துகளை இன்றைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநகரகாங்கிரஸ்கமிட்டி நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பிரச்சாரம் நாளையுடன் நிறைவு

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் பிரச்சாரம் நாளை (அக்.4) மாலை 6 மணியுடன் முடிவடைகிறது. வாக்குப்பதிவு அக்டோபர் 6ம் தேதி நடைபெற உள்ளது.

கடந்த சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்டு மதுராந்தகம் (தனி) தொகுதியில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், தாராபுரம் (தனி ) தொகுதியில் வெற்றி பெற்ற சத்யபாமா இருவரும் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தனர்.

அதேபோல், அதிமுக எம் எல் ஏக்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெருந்துறை ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா, விராலிமலை சி. விஜயபாஸ்கர், கரூர் எம்.ஆர் . விஜயபாஸ்கர் ஆகியோரும் அடுத்தடுத்து தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தனர் . அவர்கள் அனைவரும் தவெகவில் இணைந்தனர். பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். இதைத் தொடர்ந்து, 7 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் செப்டம்பர் 7ம் தேதி வெளியிட்டது. நீதிமன்ற வழக்குகள் காரணமாக எஞ்சியுள்ள 5 தொகுதிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்படவில்லை.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கு அக்டோபர் 6ல் இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் செப்.9ம் தேதி தொடங்கி 16ம் தேதி முடிவடைந்தது.

மதுராந்தகம் தொகுதியில் தவெக சார்பில் மரகதம் குமரவேல், திமுக சார்பில் பரந்தாமன், அதிமுக சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் சுகந்தி, நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் மற்றும் சுயேட்சி வேட்பாளர்கள் என மொத்தம் 28 பேர் களத்தில் உள்ளனர்.




அதே போல், தாராபுரம் தொகுதியில் தவெக சார்பில் சத்யபாமா, திமுக சார்பில் சுகன்யா, அதிமுக சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன்,

நாதக சார்பில் கார்த்திகா உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர். தவெக வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் விஜய் செப்.25ம் தேதியும் நேற்றும் மதுராந்தகம் தொகுதியில் பிரச்சாரம் செய்தார். செப்.30ம் தேதி தாராபுரம் தொகுதியில் பிரச்சாரம் செய்த முதல்வர், மீண்டும் நாளை அங்கு பிரச்சாரத்துக்கு செல்கிறார்.

திமுக வேட்பாளர்களுக்கு ஆதரவாக கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், இளைஞரணி செயலாளர் உதயநிதி உள்ளிட்டோரும்,

அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமியும் , கம்யூனிஸ்ட் வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்டு அக்கட்சிகளின் மாநில நிர்வாகிகளும் பிரச்சாரம் செய்தனர். நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், இரு தொகுதிகளிலும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

தவெக. திமுக, அதிமுக கூட்டணி கட்சிகளின் தலைவர்களும் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், இரு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் பிரச்சாரம் நாளை மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது. இதனால், இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் வேட்பாளர்களும் கட்சி நிர்வாகிகளும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

அக்.6ம் தேதி வாக்குப்பதிவும், 9ம் தேதி வாக்கு எண்ணிக்கையும் நடைபெறுகிறது. வாக்குப்பதிவை யொட்டி தொகுதி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

## நீர்பிடிப்பு பகுதியில் பட்டாவா? ஏரிகளை ஆக்கிரமிக்க அனுமதிக்க மாட்டோம்:

# வாணியந்தாங்கல் சித்தேரி பட்டாவை ரத்து செய்யக்கோரி பா.ம.க.வினர் ஆவேச போராட்டம் - 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

திருவண்ணாமலை வாணியந்தாங்கல் சித்தேரியின் நீர்பிடிப்பு பகுதியில் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலப்பட்டாவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், மாவட்டம் முழுவதும் ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என வலியுறுத்தி, பா.ம.க. சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்று முழக்கங்களை எழுப்பினர்.

திருவண்ணாமலை அண்ணாசிலை அருகே நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பா.ம.க. திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளர் ஏந்தல் பெ.பக்தவச்சலம் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் இல.பாண்டியன், உழவர் பேரியக்க மாவட்ட செயலாளர் கோ.சிவக்குமார், பாட்டாளி தொழிற்சங்க மாவட்ட செயலாளர் வி.பிரபு, மாநில செயற்குழு உறுப்பினர் கு. சேட்டு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாணியந்தாங்கல் பா.ம.க. முன்னோடி நிர்வாகி வி.முருகன் வரவேற்றார்.

### 3 ஏக்கருக்கு மேல் பட்டா வழங்கப்பட்டதாக புகார்

திருவண்ணாமலை வட்டத்துக்குட்பட்ட வாணியந்தாங்கல் சித்தேரியின் நீர்பிடிப்பு பகுதியில் 3 ஏக்கருக்கும் அதிகமான நிலத்துக்கு முறைகேடாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக பா.ம.க.வினர் குற்றம் சாட்டினர். நீர்நிலைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பட்டா வழங்குவது எதிர்காலத்தில் நீர்வளத்துக்கும், பொதுமக்களின் வாழ்வாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், சம்பந்தப்பட்ட பட்டாவை வருவாய்த்துறை அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும் கிளிநகர் ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்றும், ஏரி, குளங்களின் நீர்வரத்து கால்வாய்களை தூர்வாரி பாதுகாக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

### "நீர்நிலைகளை அழிக்க விடமாட்டோம்"

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பா.ம.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கிராம பெண்கள், நீர்நிலைகளை பாதுகாக்க வலியுறுத்தி தொடர்ந்து கோஷங்களை எழுப்பினர். "நீர்நிலைகளை பாதுகாப்போம்; வாணியந்தாங்கல் மக்களை காப்போம்; சித்தேரியை பாதுகாப்போம்; நீர்வளத்தை காப்போம்; பொதுப்பாதையை பாதுகாப்போம்; ஏரி, குளங்களை பாதுகாப்போம்; நீர்வரத்து கால்வாய்களை பாதுகாப்போம்; மழைநீரை சேமிப்போம்; மண் வெட்டி எடுப்பதை தடுக்க வேண்டும்" என முழக்கமிட்டனர்.



மேலும், "நீர்ப்பிடிப்பு பகுதியில் பட்டா வழங்காதே; வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்" என ஆவேசமாக கோஷங்களை எழுப்பினர். பொதுமக்களுக்கு தேவையான சுடுகாட்டுப் பகுதியை பாதுகாக்க வேண்டும் என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் துரிஞ்சாபுரம் பா.ம.க. ஒன்றிய தலைவர் வி.பட்டுசாமி, கிளிப்பட்டு ஊராட்சி கிளை தலைவர் பி.முருகன், கோட்டாங்கல் ப.குமார் உள்ளிட்ட பா.ம.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் வாணியந்தாங்கல் ஜி.அஜீத்குமார் நன்றி கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பெண்கள் உள்ளிட்ட பயணிகள் கட்டணமின்றி பேருந்துகளில் பயணம் செய்யும் வகையில் "வெற்றி பயணம்" திட்டத்தை தொடங்கி வைத்தார். இதனைத்தொடர்ந்து, திருவண்ணாமலை மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், "வெற்றி பயணம்" திட்டத்தின் கீழ் இயக்கப்பட உள்ள பேருந்துகளை கொடியசைத்து மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

## "தேனி மாவட்டத்தில் ஊராட்சி செயலாளர்கள் பற்றாக்குறை"

## கிராமங்களில் அடிப்படை பணிகள் முடங்கி பொதுமக்கள் தவிப்பு!

தேனி மாவட்டம், சின்னமனூர் ஒன்றியத்திற்குட்பட்ட அழகாபுரி, அய்யம்பட்டி, சின்ன ஓவுலாபுரம், எரணம்பட்டி, எரசக்கநாயக்கனூர், காமாட்சிபுரம், கன்னிசேர்வைபட்டி, முத்துலாபுரம், பொட்டிபுரம், பூலானந்தபுரம், புலிகுத்தி, சங்கராபுரம், சீப்பாலக்கோட்டை மற்றும் வேப்பம்பட்டி ஆகிய 14 கிராம ஊராட்சிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலான ஊராட்சிகளில் நிரந்தர ஊராட்சி செயலாளர்கள் நியமிக்கப்படாததால், கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமான அடிப்படை பணிகள் அனைத்தும் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஒரு ஊராட்சி செயலாளரே இரண்டு ஊராட்சிகளை கூடுதல் பொறுப்பாக கவனித்து வருவதால், பணிகளை முழுமையாகவும் செய்ய முடியாமல் கடும் காலதாமதம் உருவாகிறது. இதனால் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு, மருத்துவ பணிகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் பணிகள் உள்ளிட்ட அன்றாட தேவைகளுக்குக்கூட பொதுமக்கள் பெரிதும் அலைக்கழிக்கப்பட்டு அவதியடைந்து வருகின்றனர். இரண்டு ஊராட்சிகளை ஒருவர் கவனிக்கும் சூழலில், நிர்வாக சிக்கல்கள் அதிகரித்து பல வேறு அன்றாட பிரச்சினைகளும் உருவாகின்றன. எனவே, கிராமப்புற மக்களின் நலனை முதன்மையாக கருத்தில் கொண்டு, நிலுவையில் உள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணும் வகையில், ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனித்தனியாக புதிய ஊராட்சி செயலாளர்களை விரைந்து நியமிக்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழ்நாடு அரசு கால்நடை நோய் தடுப்பு மருந்து இயக்குனருக்கு பணி நிறைவு பாராட்டு விழா

இராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் இயக்குனராக பணியாற்றி வந்த டாக்டர் ஜே.ரூத் சோபிலா 1990 ஆம் ஆண்டு அரசு பணியில் பதவி ஏற்று இதனால் வரை 36 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு பெறுகிறார் இந்த நிகழ்ச்சியில் டாக்டர் வேணி முன்னிலை வகித்தார்




இந்த நிகழ்ச்சி யில் கூடுதல் இயக்குனர்கள் டாக்டர் பாத்திமா, டாக்டர் ஆர்.எஸ்.பி பாபு, டாக்டர் சந்துரு, இணை இயக்குனர்டாக்டர்ரஹ்மத்துல்லா மற்றும் தலைமை அலுவலகமருத்துவர்கள்வாழ்த்தி பேசினார்கள்.

மேலும் இதில் முன்னாள் இயக்குனர் (IVPM) டாக்டர் விவேகானந்தன், டாக்டர் மனோகர் பால், முன்னாள் ஆராய்ச்சி அலுவலர் டாக்டர் சந்திரசேகரன், முன்னாள் இணை இயக்குனர் டாக்டர் ஜெரால்டு ஜெபக்குமார், டாக்டர் பிரசன்னகுமார் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள், ஆய்வக்கூட பணியாளர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவர் டாக்டர் முரளிதரன். இறுதியில் டாக்டர் மோகனவேல் நன்றி உரை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் போக்குவரத்து துறை சார்பில் சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் வெற்றி பயணம் திட்டத்தை தொடங்கிவைத்தார். அதன்தொடர்ச்சியாகதிருவள்ளூர்மாவட்டம்மற்றும்வட்டம், வேங்கிநல்லூர் பகுதியிலுள்ள புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா வெற்றி பயணத் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து, மகளிருக்கு விலையில்லா பயணச்சீட்டினை வழங்கி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி பயணிகளுடன்பேருந்தில் பயணம் மேற்கொண்டார். உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா. உதவி இயக்குநர் (பயிற்சி) கே.சாகித்யா. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக துணை மேலாளர் வெங்கடேசன், போக்குவரத்து கழக பணியாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

## தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி சமுதாய நலக்கூடத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் உல்லாசம் தலைமையில் நடைபெற்றது.

கிராமசபைக்கூட்டத்தில் பற்றாளர் ஸ்ரீபிரியா, சுகாதாரத்து றையை சேர்ந்த காசநோய் முதுநிலை மேற்பார்வையாளர் பி.மோகன், சுகாதாரசெவிலியர் கலைவாணி, உணவுத்துறை பாரதி, மகளிர் குழு பயிற்றுநர் வேல்விழி, கால்நடைத்துறை அலுவலர், மகளிர் குழுநிர்வாகிகள், ஊராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



இக்கூட்டத்தில் வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வதார திட்டம், தூய்மையான குடிநீர், தூய்மை பாரத இயக்கம் ஊரக திட்டம், ஊராட்சி பொது நிதி செலவினம், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் நீர் நிலை கால்வாய்கள்தூர்வாருதல்உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.





இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், காட்ரம்பாக்கம் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி தினத்தையொட்டி நடத்தப்பட்ட கிராமசபை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திற னாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகள் கேட்டறிந்தார். உடன் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி.ச.செல்வராணி, ஒன்றியக் குழு தலைவர் திரு.கலைகுமார், உதவி இயக்குநர் ஊராட்சி திருமதி.விஷ்ணுபிரியா, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.உமா மற்றும் பலர் உள்ளனர்.

## செய்யாறில் மூதாட்டியை கருங்கல்லால் தாக்கி தாலி பறிப்பு; இளைஞர் கைது

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில், மூதாட்டியை கருங்கல்லால் தாக்கி செயின் பறித்துச் சென்ற சம்பவத்தில், இளைஞர் கைது. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி விநாயகர் கோயில் தெருவை



சேர்ந்தவர் சரசு(58). மூதாட்டியான இவர் கடந்த 29 ம் தேதி விநாயகர் கோயிலில் நடைபெற்ற சங்கடஹர சதுர்த்தி விழாவில் பங்கேற்றார். பின்னர் கோயிலில் வழங்கப்பட்ட பிரசாதத்தை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு செல்வதற்காக சென்றுக் கொண்டு இருந்தார். மூதாட்டியை நோட்டமிட்ட மர்ம நபர் இருள் சூழ்ந்த பகுதியில் அவரை வழிமறித்து அவர் அணிந்திருந்த தாலி கயிறை பறிக்க முயன்றுள்ளனர். அப்போது மூதாட்டி அதனை தடுக்க முயன்றப் போது மர்ம நபர் கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து மூதாட்டியின் தலை, கழுத்துப் பகுதியில் தாக்கிக் காயப்படுததினர். மேலும், மூதாட்டி காதில் அணிந்திருந்த கம்பளை பறிக்க முடியததால் காதில் ஒரு பக்கத்தில் இருந்த கம்மலை பறித்துச் சென்றதாகத் தெரிகிறது.

இதில் மயக்கமடைந்த மூதாட்டியை அந்த வழியாக சென்றவர்கள் அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் செய்யாறு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்த்தனர். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார். தகவல் அறிந்த திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உதயகுமார் செவ்வாய்கிழமை நள்ளிரவு சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணையை தீவிரப் படுத்தினார். மேலும், மோப்ப நாய் வீரா வரவைத்தும், தடய அறிவியல் நிபுணர்கள் மூலம் தடங்களை பதிவு செய்து அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமிரா பதிவுகளை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டு உள்ளனர்.தனிப்படை அமைப்பு செய்யாறு பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்திய தாலி பறிப்பு சம்பவம் தொடர்பாக செய்யாறு போலீஸ் இன்ஸ்பெக்டர் நரசிம்மஜோதி தலைமையில் 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர விசாரணை மேற்கொண்டு உள்ளனர். மேலும் செய்யாறு போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிரமாக விசாரணை மேற்கொண்ட நிலையில் சம்பவம் தொடர்பாக செய்யாறு நேரு நகரைச் சேர்ந்த கார்த்திக் (26) என்பவரை கைது செய்து அவர் மறைத்து வைத்திருந்த சுமார் ஒரு சவரன் தாலி உள்ளிட்ட நகைகளையும் பைக்கையும் போலீசார் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட கார்த்தியை செய்யாறு குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் சென்னை கோயம்பேடு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் வெற்றிப் பயணம் திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் இராணிப்பேட்டை நகராட்சி, முத்துக்கடை பேருந்து நிறுத்தத்தில் வெற்றிப் பயணம் திட்டத்தின் கீழ் இயக்கப்படும் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

## திருவண்ணாமலையில் காந்தியடிகளின் சிலைக்கு லட்சிய ஜனநாயக கட்சியினர் மரியாதை

திருவண்ணாமலை: மகாத்மா காந்தியின் 158 வது பிறந்தநாளையொட்டி, திருவண்ணாமலையில் உள்ள காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு லட்சிய ஜனநாயக கட்சியின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

லட்சிய ஜனநாயக கட்சியின் மண்டல செயலாளர் ஜம்புலிங்கம் மற்றும் தெற்கு மாவட்ட செயலாளர் நாரையூர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு காந்தியடிகளின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.நிகழ்ச்சியில்மாவட்ட துணைச் செயலாளர்கள் வெங்கட், கும்கி சுபாஷ், அரவிந்த், மாவட்ட பொருளாளர் வெங்கடேஸ்வரன், தொகுதி செயலாளர் ஆலடியான், மாவட்ட இளைஞரணி செயலாளர் வினோத், மாவட்ட மகளிரணி செயலாளர் ஜாக்குலின், மாவட்ட மகளிரணி பொருளாளர் ஜாஸ்மின், மாவட்ட மகளிரணி துணைச் செயலாளர்கள்



தீபா, சுகன்யா, சசிகலா ஆகியோர் பங்கேற்றனர். மேலும், தெற்கு ஒன்றிய செயலாளர்கள் வி. குமார், ஆறுமுகம், சக்திவேல், நகர செயலாளர்கள் விஜய், கதிரவன், மணி, மாவட்ட ஆர்.டி.ஜி. பிரிவு தலைவர் பவன்குமார், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் மாணிக்கம், வட்டச் செயலாளர் அருள்ராஜ் பயஸ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு காந்தியடிகளுக்கு மரியாதை செலுத்தினர்.

காந்தியடிகளின் கொள்கைகளான அகிம்சை, உண்மை, ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பின்பற்றி செயல்பட வேண்டும் என நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே பால சமுத்திரம் மேல்நிலைப் பள்ளியில் விசுவாசம் அறக்கட்டளையின் NSS ஏழாம் நாள் முகாம் நிறைவு விழா

பழனி விசுவாசம் அறக்கட்டளை மற்றும் பால சமுத்திரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் படை NSS இணைந்து நடத்திய ஏழாம் நாள் சிறப்பு முகாம் நிறைவு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது எனக்காக அல்ல உனக்காக (NotMeButYou) போதை ஒழிப்பு கலாச்சாரம் மற்றும் காச நோய் இல்லா வருங்காலம் ஆகிய முக்கிய விழிப்புணர்வு தலைப்புகளை மையமாகக் கொண்டு இம்முகாம் நடத்தப்பட்டது பழனி பெரு நகராட்சி 25 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் திருமதி ஜென்னத்துள் பிர்தவ்ஸ் ராஜா முகமது அவர்கள் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது விழாவின் சிறப்பு அம்சமாக அறக்கட்டளையின் பெருமைமிக்க 1000 வது மரக்கன்று பள்ளி வளாகத்



தில் நடைபெற்றது மேலும் முகாமில் தீவிரமாக பங்கேற்று விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவ மாணவிகளுக்கு அறக்கட்டளை சார்பாக சிறப்பு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது சமூகம் நலங்காக்கும் இது போன்ற விழிப்புணர்வு முகாம்களே முன்னெடுத்து அறக்கட்டளையினர் மற்றும் மாணவ மாணவிகள் பள்ளி பள்ளி நிர்வாகத்தினர் பொதுமக்களும் வெகுவாக பாராட்டினர்

## பாடியநல்லூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி கங்கை அம்மன் கோவில் வளாகத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் கே.ஆர். சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

பற்றாளர் கலைச்செல்வி, கிராம நிர்வாக அலுவலர்கிறிஸ்சாந்தினி, கிராம உதவியாளர்கள் உள்ளிட்ட ஊராட்சி பணியாளர்கள், மகளிர் குழு நிர்வாகிகள், ஊராட்சிக்குட்பட்டபல்வேறுநகர்களைச்



சேர்ந்த கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வதார திட்டம், தூய்மையான குடிநீர், டெங்கு காசநோய் விழிப்புணர்வு, தூய்மை பாரத இயக்கம் ஊரக திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

## புள்ளிலையன் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்




திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சி மகளிர் குழு கட்டிடத்தில் அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்ததினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் பொன்னையன் தலைமையில் நடைபெற்றது.

கிராம சபைக் கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் பி.செந்தில் குமார், புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், பற்றாளர் சுலோக்சனா, கிராம நிர்வாக அலுவலர் லோகேஷ் உள்ளிட்ட மகளிர் குழு நிர்வாகிகள், ஊராட்சி பணியாளர்கள், தவெக புள்ளிலைன் ஊராட்சி செயலாளர் பவித்குமார் உள்ளிட்ட கிராம பொது மக்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி மன்றம் பொது நிதி செலவினம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வதார திட்டம், தூய்மையான குடிநீர், தூய்மை பாரத இயக்கம் ஊரக திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. கிராம சபை கூட்டத்தில் பல்வேறு குடியிருப்போர் சங்கங்களை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள பிரச்னைகள், தேவைகள் குறித்து மனு வழங்கினர்.

# "சீலையம்பட்டி கிராமசபை கூட்டத்தில் மக்கள் அதிருப்தி" மாவட்ட ஆட்சியர் நேரடியாக கலந்து கொள்ள பொதுமக்கள் கோரிக்கை!




தேனி மாவட்டம் சீலையம்பட்டி ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கிராமசபை கூட்டம், எந்தவித பயனுமன்றி பெயரளவில் மட்டுமே நடந்து முடிந்திருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ஊராட்சியில் நிலவும் அத்தியாவசிய பிரச்சனைகள் குறித்து பேச வந்த மக்களை அலட்சியப்படுத்தும் வகையில் அலுவலர்களின் செயல்பாடுகள் அமைந்திருந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சீலையம்பட்டியின் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் நீண்ட நாட்களாக சாக்கடைகள் தூர்வாரப்படாமல் அடைபட்டு, கடுமையான துர்நாற்றம் வீசி வருகிறது.

இதனால் அப்பகுதியில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதோடு, குடிநீரும் சீராக விநியோகிக்கப்படுவதில்லை. மேலும், பொதுக் கழிப்பிட வசதிகள் சரிவர பராமரிக்கப்படாததால், வேறு வழியின்றி மக்கள் திறந்தவெளியை பயன்படுத்தும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் பல முறை முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். அத்துடன், ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு, எந்தெந்த திட்ட பணிகளுக்கு எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது, நிறைவு பெற்ற பணிகள் என்னென்ன என்பன போன்ற அடிப்படை நிதி செலவின விவரங்கள் எதுவுமே மக்களுக்கு தெரிவிக்கப்படாமல் இருட்டடிப்பு செய்யப்படுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

கிராம மக்களின் குறை தீர்க்க வேண்டிய கிராம சபை கூட்டத்திற்கு வருகை தந்த மண்டல அலுவலர் வெங்கடேசன், மக்கள் கோரிக்கைகளை காதுகொடுத்து கேட்காமல், அவசர அவசரமாக அஜெண்டா நோட்டை புரட்டிவிட்டு வெறும் 10 நிமிடங்களிலேயே கூட்டத்தை முடித்து கொண்டு வெளியேறியுள்ளார்.

அரசின் வழிகாட்டுதல்களை காற்றில் பறக்க விட்டு, மக்களாட்சியின் உயர் நோக்கத்தையே கேலிக்கூத்தாக்கும் வகையில் செயல்பட்ட அலுவலர்களின் இந்த அலட்சியப் போக்கு பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் சீலையம்பட்டியில் நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக கலந்துகொண்டு, ஊராட்சியின் செயல்பாடுகள் குறித்து நேரடி கவனம் செலுத்த வேண்டும் என்றும், சீர்கெட்டு போய் கிடக்கும் அடிப்படை வசதிகளை உடனடியாக சீரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




மத்திய அரசு கல்வி நிறுவனங்களான IIT, IIM, IIIT, NIT மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த பி.வ. மி.பி.வ மற்றும் சீ.ம இன (BC,MBC/DNC) மாணவ, மாணவிகள் 202627ஆம் கல்வி ஆண்டிற்கான புதியது மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித் தொகை (Fresh and Renewal Applications) விண்ணப்பித்தல்" தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள IIT, IIM. IIIT, NIT மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு/பட்ட மேற்படிப்பு பயிலும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள BC, MBC/DNC மாணவர்களுக்கு, கற்பிப்பு கட்டணம், சிறப்பு கட்டணம், தேர்வு கட்டணம் மற்றும் இதரகட்டாய கட்டணங்கள் அல்லது ஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

விண்ணப்பம் பெறும் இடங்கள்:1. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை 52. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், சென்னை53. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நல அலுவலகம்)4. இணையதளம் www.bcw.tn.gov.inகுறிப்பு: மத்திய/மாநில அரசின் இதர கல்வி உதவித் திட்டங்களில் பயன்பெறும் மாணவர்கள் இத்திட்டத்திற்கு தகுதியற்றவர்கள்.சமர்ப்பிக்கும் முறை:விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கல்வி நிறுவனத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.கல்வி நிறுவனம் Bonafide Certificate உடன் பரிந்துரை செய்து, சம்பந்தப்பட்ட நலத்துறைக்கு அனுப்ப வேண்டும்.Renewal விண்ணப்பங்கள் 31.10.2026க்குள். Fresh விண்ணப்பங்கள் 30.11.2026க்குள் அனுப்பப்பட வேண்டும். Even Semester கட்டண இரசீதுகள் 15.01.2027க்குள் அனுப்பப்படவேண்டுமென மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன்.இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஆங்காடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம்



திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் ஆங்காடு ஊராட்சியில் அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்ததினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் தனசேகரன் தலைமையில் ஆங்காடு சிறுனியம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.சோழவரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் மாணிக்கம், பற்றாளர் விஜயலட்சுமி, கிராம உதவியாளர்கள் மஞ்சுளா, பேகம் உள்ளிட்ட ஊராட்சி பணியாளர்கள், மகளிர் குழு நிர்வாகிகள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழக வெற்றி ஊரக மதிப்பீட்டு குழு அமைத்தல், சிறு பாசன குளங்கள், ஏரிகள் புதுப்பித்தல், தூய்மையான குடிநீர் வழங்குதல், டெங்கு காசநோய் விழிப்பு உணர்வு, வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வதார திட்டத்தின் கீழ் 125 நாள்கள் வேலை வாய்ப்பு உத்தரவாதம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.








# மகரிஷி வித்யா மந்திர் பள்ளியின் 35 ஆம் ஆண்டு விளையாட்டு தின விழாகொண்டாட்டம்

திருவண்ணாமலை மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் விளையாட்டுத் தின விழா 3009 2026 மற்றும் 01102026 ஆகிய இரண்டு நாட்களும் மிகச் சிறப்பாக் கொண்டாடப்பட்டது. பள்ளியின் முதல்வர் R. அனிதாராம் குருபூஜை செய்து சிறப்பு விருந்தினர்களோடு இணைந்து, குத்து விளக்கு ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்துத் தலைமை உரை ஆற்றினார்.

இவரது தலைமை உரையில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தையும், விளையாட்டு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உடல்நலம், மனநலம், உண்மை, நேர்மை, விட்டுக்கொடுத்தல் மற்றும் சகோதரத்துவத்தையும் கற்றுக் கொடுக்கிறது என்பதை எடுத்துரைத்துஒலிம்பிக்கொடி மற்றும் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார். பின்னர் மழலையர் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் நாராயண், பராசர், வசிஷ்டர் மற்றும் வியாசர் என நான்கு அணிகளாக பிரிந்து தனிநபர் மற்றும் குழு போட்டிகளில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.மேலும் சிலம்பம் மற்றும் மழலையர் நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.பின்னர்இவ்விழாவின்சிறப்புவிருந்தினராக திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலர் K.கருணாநிதி கலந்து கொண்டு Pre.Kg முதல் ஐந்தாம் வகுப்பு வரை வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களையும் வழங்கி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இவ்விழாவின் இரண்டாம் நாள் சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அலுவலர் T. சண்முகப்பிரியா விழாவினை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார் இவரது சிறப்புரையில் மாணவர்கள் பள்ளி பருவத்தில் இருந்தே தன்னுடைய இலக்கை நிர்ணயித்து கல்வியையும் விளையாட்டையும் இரு கண்களாக கொண்டு அதற்காக கடுமையாக உழைக்க வேண்டும் என்றும்,ஒவ்வொரு மாணவரும் இந்தியாவிற்கு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற்றுத் தர வேண்டும் என்று கூறி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். மேலும் குழு விளையாட்டுப் போட்டிகளான கோ கோ, கால் பந்து மற்றும் எறிபந்து போன்றவை நடத்தப்பட்டது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் மற்றும் பள்ளி முதல்வர் சான்றிதழையும் பதக்கத்தையும் வழங்கிப் பாராட்டினார். விழாவின் முக்கிய தருணமான 'ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப்' பட்டத்தை வென்ற வசிஷ்டர் அணிக்கு வெற்றிக்கோப்பை வழங்கப்பட்டது. பின்னர் வேதியில் ஆசிரியர் திரிசூல் நன்றியுரை வழங்கினார். இவ்விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.

# முதல்வர் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் S.K.P. சட்டக் கல்லூரி மாணவி தங்கப் பதக்கம் வென்று சாதனை



திருவண்ணாமலை: தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற முதல்வர் கோப்பை – 2026 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், பேட்மிண்டன் போட்டியில் S.K.P. சட்டக் கல்லூரியில் 3ஆம் ஆண்டு B.A., LL.B. படித்து வரும் மாணவி செல்வி C.V. கிம்லிண்ட்சே சிறப்பாக விளையாடி மாவட்ட அளவில் சாம்பியன் பட்டம் பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

மாவட்ட அளவில் நடைபெற்ற பேட்மிண்டன் போட்டியில் தனது சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தி முதலிடம் பெற்ற மாணவி கிம்லிண்ட்சேக்கு தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப் பட்டது. வெற்றி பெற்ற மாணவிக்கு மண்டல விளையாட்டு அலுவலர் அவர்கள் பதக்கம் அணிவித்து, பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார். கல்வியுடன் விளையாட்டிலும் சிறந்து விளங்கி, மாவட்ட அளவில் நடைபெற்ற முதல்வர் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் சாம்பியன் பட்டம் மற்றும் தங்கப் பதக்கம் வென்ற மாணவி C.V. கிம்லிண்ட்சேயை எஸ்கேபி கல்வி குழுமங்களின் தலைவர் கு கருணாநிதி, இணைச்செயலாளர் அரங்கசாமி, முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஆர் சக்தி கிருஷ்ணன், சட்டக் கல்லூரி முதல்வர் முனைவர் ரவி, பிஆர்ஓ சையத் ஜஹிருத்தீன், உடற்கல்வி இயக்குனர், மண்டல முதுநிலை மேலாளர் சாந்திமற்றும்உடற்கல்வி ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வெகுவாக பாராட்டி வாழ்த்தினர்.

# சின்னமனூர் நகர புதிய காவல் ஆய்வாளருக்கு இந்தியன் ரெட் கிராஸ் சங்கம் வாழ்த்து




தேனி மாவட்டம் சின்னமனூர் நகர காவல் நிலைய புதிய ஆய்வாளராக திரு. K. கதிரேசன் அவர்கள் 01.10.2026 அன்று முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு, இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் தேனி மாவட்டம், சின்னமனூர் ஒன்றிய கிளையின் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. அவருடைய 'பணி சிறக்கவும், மக்கள் சேவையில் மேலும் பல சாதனைகள் புரியவும் மனமார்ந்த நல் வாழ்த்துகள்' என சின்னமனூர் ஒன்றிய கிளை செயலாளர் Rtn. PHF. LK. சிவமணி அவர்கள் தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

# "கடமலைக்குண்டு ஊராட்சியில் கிராம சபை கூட்டம் " பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்!

கடமலைக்குண்டு ஊராட்சிக்குட்பட்ட கரட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. வட்டார வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்/ தணிக்கை) உம்முல் ஜாமியா அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும், ஆண்டிபட்டி வட்டாட்சியர் இளங்கோவன் அவர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் கடமலைக்குண்டு கிராமத்தில் உள்ள வண்ணான் குளத்தை தூர்வாருதல், கடமலைக்குண்டு மெயின் தெருவில் மழைநீர் தேங்காதவாறு புதிய வடிகால் அமைத்தல், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள வடிகால்களை உயர்த்தி கட்டுதல், வி. பி.ஜி.ராம்ஜி திட்டத்தின் மூலம் வரத்து வாய்க்கால்களை சீரமைத்தல் மற்றும் லட்சாதிபதி சகோதரி திட்டத்தை ஊக்குவித்து கிராமப்புற மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் அப்பகுதியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் பகுதி கோரிக்கைகளை முன்வைத்தனர்.



இச்சிறப்பு கிராம சபை கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கடமலைக்குண்டு ஊராட்சி செயலாளர் சின்னசாமி சிறப்பாக செய்திருந்தார்.

# நல்லூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்




திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சிவந்தி ஆதித்தன் நகர் முத்துமாரியம்மன் கோவில் அருகில் அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்ததினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

சோழவரம் ஊராட்சி ஒன்றிய பற்றாளர் பி.எஸ். அருள், கிராம உதவியாளர்கள் உள்ளிட்ட ஊராட்சி பணியாளர்கள், மகளிர் குழு நிர்வாகிகள், நல்லூர் ஊராட்சிக்குட்பட்ட பல்வேறு நகர்களைச் சேர்ந்த கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வதார திட்டம், தூய்மையான குடிநீர், தூய்மை பாரத இயக்கம் ஊரக திட்டம், கிராம ஊராட்சி தணிக்கை அறிக்கை, கிராம செழுமை மீட்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# "போடியில் மகளிர் தங்கத் தளபதி வெற்றிப் பயண திட்டம் தொடக்கம்" அண்ணன் ஆர்.எஸ்.பிரகாஷ் வழிகாட்டுதலில் எஸ்.கே.ஜெயபிரகாஷ் தலைமையேற்பு



மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட மகளிருக்கான வெற்றிப் பயணத் திட்டம், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் அண்ணன் ஆர்.எஸ். பிரகாஷ் அவர்களின் அறிவுறுத்தலின்படி போடியில் மிக சிறப்பாக தொடங்கி வைக்கப்பட்டது. போடி மேற்கு ஒன்றிய செயலாளர் திரு. எஸ்.கே. ஜெயபிரகாஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், போடியில் இருந்து திட்டம்முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. விழாவில் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக, போடி பகுதி பொதுமக்கள் பல்வேறு தேவைகள் குறித்து திரு. எஸ்.கே. ஜெயபிரகாஷ் அவர்களிடம் வழங்கிய மனுக்களை பரிசீலித்து, அவற்றை உடனுக்குடன் பூர்த்தி செய்து மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுத்துள்ளார் என்பதுகுறிப்பிடத்தக்கது. கட்சி பணிகளுடன் மக்கள் நல பணிகளையும் தொடர்ந்து சிறப்பாக செய்து வரும் அவருக்கு பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# வார்டு 16ல் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 5 கிலோ கோதுமை மாவு - சமூக சேவகர் பிரகாஷ் வழங்கினார்

கே.ஜி.எஃப்: காந்தி ஜெயந்தி மற்றும் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின்பிறந்தநாளை முன்னிட்டு, கே.ஜி.எஃப் எம்.எல். பிளாக் வார்டு 16ல் சமூக சேவகர் பிரகாஷ் சார்பில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதன் ஒரு பகுதியாக வார்டு 16ல் உள்ள 300க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா 5 கிலோ கோதுமை மாவு பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன. பொதுமக்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று கோதுமை மாவு வழங்கிய இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பகுதி மக்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளைப் பெற்றுக் கொண்டனர். காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு உதவும் வகையில் தொடர்ந்து பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வருவதாக சமூக சேவகர் பிரகாஷ் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த ஒரு வருடமாக வார்டு 16 மக்களுக்காக பல்வேறு சமூக நலத்திட்டங்களை மேற்கொண்டு வருவதாக கூறினார். குறிப்பாக சுதந்திர தின கொண்டாட்டங்களை முன்னிட்டு இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள், குடிநீர் கேன்கள் விநியோகம், மளிகைப் பொருட்கள் அடங்கிய நலத்திட்ட தொகுப்புகள் உள்ளிட்ட



பல்வேறு உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளதாக தெரிவித்தார். மக்களின் அடிப்படை தேவைகளை அறிந்து,

தன்னால் முடிந்த உதவிகளை தொடர்ந்து செய்து வருவதாகவும் பிரகாஷ் கூறினார். அதே நேரத்தில் வார்டு 16ல் இன்னும் போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். குறிப்பாக மழைக்காலங்களில் பல்வேறு பகுதிகளில் கழிவுநீர் தேங்கி, சில நேரங்களில் வீடுகளுக்குள் கழிவுநீர் புகும் நிலை ஏற்படுவதாகவும், இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறினார். சாலை, கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட அடிப்படைபிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நேரில்வந்து ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மக்களின் பிரச்சினைகளுக்கு நேரடியாக தீர்வு காணவும், வார்டு 16ன் வளர்ச்சிக்காக பணியாற்றவும் வரவிருக்கும் நகராட்சித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாகவும் பிரகாஷ் தெரிவித்தார். “மக்களின் பிரச்சினைகளை அருகில் இருந்து பார்த்து வருகிறேன். வார்டின் வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளேன்.

மக்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். உங்கள் ஆசீர்வாதமும் ஆதரவும் எனக்கு தேவை” என்று வார்டு மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார். மேலும் வார்டு 16ல்சாலை, கழிவுநீர்கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகதொடர்ந்து குரல் கொடுப்பேன் என்றும், பொதுமக்களின்பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வு காண நடவடிக்கை எடுப்பேன் என்றும்பிரகாஷ் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் உஷா அமைப்பின் தலைவர்களான கிருஷ்ணமூர்த்தி, சுரேஷ், கலை அரசன், ராகுல், பாபு, குட்டி உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர். காந்தி ஜெயந்தி மற்றும் லால் பகதூர் சாஸ்திரி பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா 5 கிலோ கோதுமை மாவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மக்களுக்கான சமூகப் பணிகளில் ஈடுபடுவேன் என்றும், வார்டு 16ன் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண பாடுபடுவேன் என்றும் சமூக சேவகர் பிரகாஷ் தெரிவித்தார்.

# “கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி” — கோணலூர் கிராம சபையில் கலெக்டர் வந்தனா கார்க் வலியுறுத்தல்

“கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. கிராம மக்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நேரடியாக அறிந்து, அதற்கேற்ப அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள கிராம சபைக் கூட்டங்கள் முக்கிய பங்காற்றுகின்றன” என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்தார்.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, கீழ்பெ ன்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குஉட்பட்ட கோணலூர் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமை வகித்து மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் பேசியதாவது:

“உத்தமர் காந்தியடிகள், இந்தியாவின் வளர்ச்சி கிராமங்களில்தான் உள்ளது என்று வலியுறுத்தினார். கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாகும். கிராம சபைக் கூட்டங்கள் கிராமங்களின் வளர்ச்சியை முன்வைத்து நடத்தப்படுகின்றன.

கிராம வளர்ச்சிக்கான பொதுமக்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு வரவும், மக்களின் தேவைகளை அறிந்து அரசு சார்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இக்கூட்டங்கள் உதவுகின்றன. மேலும், கிராமங்களில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் மற்றும் அவற்றுக்காக செலவிடப்படும் நிதி விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும்கிராம சபைக் கூட்டங்கள் வாய்ப்பாக அமைகின்றன.

பெண் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு, 14 வயது நிறைவடைந்த பெண் குழந்தைகளுக்கு கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்கான HPV தடுப்பூசி செலுத்துவது அவசியம். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளிகளில் இந்தத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இது பாதுகாப்பான தடுப்பூசியாகும். பெற்றோர் அலட்சியம் காட்டாமல் தங்களது பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி செலுத்துவதில் உரிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாவட்டம் முழுவதும் குப்பைகளை அகற்றவும், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க




வும் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதுடன், தங்களது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பெண் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே திருமணம் நடைபெறுவதால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. மேலும், இளம் வயதிலேயே குடும்பப் பொறுப்புகளை ஏற்க வேண்டிய சூழல் ஏற்படுவதால் அவர்களின் எதிர்காலக் கனவுகளும், உயர்கல்வி வாய்ப்புகளும் பாதிக்கப்படுகின்றன. குழந்தை திருமணங்களைத் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பெற்றோர்களும் பொதுமக்களும் குழந்தை திருமணங்களுக்கு எதிராக குரல் கொடுத்து, அவற்றைத் தடுப்பதில் ஒத்துழைக்க வேண்டும். அதேபோல், அனைவரும் சாலை விதிகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதிவேகமாக வாகனம் இயக்குவதால் பல்வேறு விபத்துகள் ஏற்பட்டு, குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் சாலை பாதுகாப்பு குறித்து குடும்பத்தினரிடமும் குழந்தைகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இருசக்கர வாகனங்களில் செல்லும்போது கட்டாயம் தலைக்கவசம் அணிந்து, சாலை விதிகளைப் பின்பற்றி வாகனங்களை இயக்க வேண்டும்” என்றார். தொடர்ந்து, உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் “போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” என்ற நோக்கத்தின் கீழ் போதைப்பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஏற்கப்பட்டது. அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வுடன் செயல்படவும், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களை போதைப்பழக்கத்திலிருந்து பாதுகாக்கவும், போதைப்பழக்கத்திற்கு உள்ளானவர்களை மீட்டு நல்வழிப்படுத்தவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் சார்பில் நடைபெற்றுவரும் தேசிய ஊட்டச்சத்து மாதம் 2026 நிகழ்வின் ஒரு பகுதியாக, “அங்கன்வாடி நமது பொறுப்பு” என்ற கருப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடைபெற்றது. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவதன் அவசியம் மற்றும் ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதிக்கப் பட்டது. திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, போதைப்பொருள் ஒழிப்பு, டெங்கு விழிப்புணர்வு, குழந்தை திருமணத் தடுப்பு, மூத்த குடிமக்கள் பராமரிப்பு, பனை விதை நடுதல், மகளிர் மேம்பாடு, ஆரம்ப கால குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி, கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மைத் திட்டங்களின் செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் பூ. காஞ்சனா, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) தி. மலர்விழி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விமலன், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், சமூக நல அலுவலர் கோமதி, பழங்குடியினர் நலத் திட்ட அலுவலர் கலைச் செல்வி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அன்பரசி, கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் இந்திரா, வட்டார வளர்ச்சி அலுவலர் சேதுராமன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்ற கட்டிடத்தின் பராமரிப்பு மற்றும் புதிய கட்டிடங்கள் தொடர்பான பணிகளை ஆய்வு செய்யும் வகையில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசரும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஜி. இளந்திரையான் அவர்கள் 2 10 2026 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். ஆயிவின் போது கன்னியாகுமரி மாவட்ட முதன்மை மாவட்ட நீதிபதி திரு .கா. தனசேகரன் , கூடுதல் மாவட்ட நீதிபதிகள், தலைமை குற்றவியல் நடுவர், அனைத்து சார்பு நீதிபதிகள், அனைத்து உரிமையியல் நீதிபதிகள், அனைத்து குற்றவியல் நீதிபதிகள். அரசு வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர்கள், நிர்வாகிகள் ,வாய் வருவாய் துறை அதிகாரிகள் ,பொதுபணித்துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள், பொதுவாக நீதிமன்றம் வரும் பொதுமக்களுக்கும், இங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கும் வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டது

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., காந்தி ஜெயந்தி தினத்தையொட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தியடிகளின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் வடகிழக்கு பருவமழை 2026 முன்னிட்டு 24x7 இயங்கும் கட்டுபாட்டு அறை

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் வடகிழக்கு பருவமழை2026 முன்னிட்டு 24x7 இயங்கும் கட்டுபாட்டு அறையை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா நேரில் ஆய்வு மேற்கொண்டு, மழை வெள்ளம் தொடர்பான புகார்களை பதியும் பதிவேடு மற்றும் தொலைப்பேசி எண்கள் தொடர்பாக கேட்டறிந்தார். மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா, உதவி இயக்குநர் (பயிற்சி) கே.சாகித்யா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், அலுவலக மேலாளர் (பொது) வெங்கடேஷ், வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) ரஜினிகாந்த் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.





பழனியில் மகாத்மா காந்தியின் பிறந்தநாள் மற்றும் பெருந்தலைவர் காமராஜ் நினைவு நாள் முன்னிட்டு, பழனியில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக, சிலைகளுக்குமாலைஅணிவித்துமலர்தூவி மரியாதைசெய்தனர்.இந்நிகழ்ச்சியில் சொத்து பாதுகாப்பு குழு சுந்தர் தலைமையில், இளைஞர் காங்கிரஸ் தலைவர் பாலகுமார் முன்னிலையில், காமராஜர் தேசிய பேரவை பாப்பு சாமி காந்தி சிலைக்கு மாலை அணிவித்தார், நல்லாசிரியர் விருது பெற்ற அடிவாரம் ஆசிரியர் கணபதி அவர்கள் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்தார். இந்நிகழ்ச்சியில் வ உ சி சேவாதளம் என் சுந்தரம் பிள்ளை, ஆர் எப் பீட்டர், தேவேந்திரன், பாலசமுத்திரம் முருகானந்தம், மாவட்ட செயலாளர் ராமநாத கிருஷ்ணன் நன்றி கூறினார்

# காந்தி ஜெயந்தியன்று சட்டவிரோத மது விற்பனை - 4 பேர் கைது 273 மதுபாட்டில்கள் பறிமுதல் - பழனி தாலுகா போலீசார் அதிரடி நடவடிக்கை

திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாலசமுத்திரம், பொருந்தலாறு, பாப்பம்பட்டி மற்றும் கோதைமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின்படியும், பழனி துணை காவல் கண்காணிப்பாளர் தேவராஜ் உத்தரவின்படியும், பழனி தாலுகா காவல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி தலைமையில் உதவி ஆய்வாளர்கள் ராஜ்குமார், ஆனந்த் மற்றும் காவலர்கள் அடங்கிய தனிப்படை போலீசார் அப்பகுதிகளில் தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். அப்போது பாலசமுத்திரம் பகுதியில் சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ததாக ராமர், ஜெயராம், ரவிக்குமார் மற்றும் எல்லத்துரை ஆகிய நான்கு பேரை போலீசார் கைது செய்தனர். மேலும், அவர்களிடமிருந்து விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 273 மதுபாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.



இதையடுத்து கைது செய்யப்பட்ட நான்கு பேரிடமும் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

தொடர்ந்து, கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போலீசார், சட்டவிரோத மது விற்பனையில் வேறு நபர்களுக்கு தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தநிலையில்,தடையை மீறி சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்ததாக நான்கு பேர் கைது செய்யப்பட்டு, 273 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பாலசமுத்திரம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், சட்டவிரோதமாக மதுபானங்கள் விற்பனை செய்வோர் மற்றும் பதுக்கி வைப்போர் மீது தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA